بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *11/12/2020* அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. உஹது போரில், ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடியை ஒப்படைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் போரிட்டனர்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. உஹது போரில், இணைவைப்பாளர்களின் கொடியேந்துபவனான தல்ஹா பின் அபீ தல்ஹா ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் போருக்கு அழைத்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னோக்கி சென்று எந்த அளவு வாள் வீசினார்கள் என்றால், அவன் தரையில் விழுந்து துடிக்க ஆரம்பித்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் காஃபிர்களின் கொடியேந்துபவர்களை, ஒருவர் பின் ஒருவராக வாளுக்கிறையாக்கினார்கள். அவர்களைச் சிதறடித்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஷேய்பா பின் மாலிக்கை அழித்த போது, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிச்சயமாக அலீ அனுதாபத்திற்குரியவர் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! அலீ என்னைச் சேர்ந்தவர்; நான் அலீயைச் சேர்ந்தவன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், ‘‘நான் உங்கள் இருவரைச் சேர்ந்தவன்’’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘‘உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலிருந்து மக்கள் விலகிச் சென்று விட்ட போது, நான் ஷஹீதுகளின் சடலங்களில் பார்க்க ஆரம்பிக்க, அவர்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் காணப் பெறவில்லை. அப்போது நான், ‘அல்லாஹ்வின் மீதாணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓடக்கூடியவர்களாகவும் இருக்கவில்லை; நான் அவர்களை ஷஹீதுகளிலும் காணப் பெறவில்லை. ஆனால், அல்லாஹ் நம் மீது கோபமடைந்து, தனது நபியை எழுப்பிவிட்டான். ஆக, நான் கொல்லப்படும் வரை போரிடுவதே எனக்கு நல்லது’ என்று கூறினேன். பிறகு, நான் எனது வாளின் உறையைக் கிழித்தெறிந்தேன். காஃபிர்களின் மீது தாக்குதல் தொடுத்தேன். அவர்கள் இங்குமங்குமாகச் சிதறி ஓடிவிட்டனர். அப்போது நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு மத்தியில் இருப்பதைப் பார்த்தேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இது குழந்தைப் பருவத்திலிருந்து துவங்கி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது தோற்றத்தை வெளிப்படுத்தி வந்த நேசம் மற்றும் விசுவாசத்தின் கதையாகும்.

ஹஸ்ரத் சஹ்ல் பின் சஃத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ‘‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உஹது போரில் காயங்கள் ஏற்பட்ட போது, ஹஸ்ரத்

ஃபாத்திமா (ரலி) அவர்கள் காயங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேடயத்தால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

அகழ்ப் போரில் (வெளிப்பட்ட) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வீரச் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத், எம்.ஏ., (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:-

‘‘அம்ர் ஒரு பெயர் போன வாள்வீச்சாளனாக இருந்தான். தனது வீரத்தின் காரணமாகத் தனியாகவே ஆயிரம் போர் வீரர்களுக்கு நிகராகக் கருதப்பட்டான். அவன் களத்துக்கு வந்தவுடனேயே மிகவும் அகம்பாவத் தோரணையில், அணியை விட்டு போரிட முன் வருமாறு அழைத்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியோடு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் போரிட முன் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்குத் தமது வாளைக் கொடுத்து அவர்களுக்காக துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்று அம்ரிடம், ‘‘குறைஷியர்களில் யாராவது உன்னிடம் இரு விஷயங்களைக் கேட்டால், நீ அவற்றில் ஒன்றைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துள்ளதாக நான் கேள்விப்பட்டேன்’’ என்று கூறினார்கள். அம்ர், ஆம்! என்று சொன்னான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘‘அப்படியென்றால், நான் உன்னிடம் முதல் விஷயமாக, நீ முஸ்லிம் ஆகிவிடு! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு இறையருட்களுக்கு வாரிசாகி வீடு என்று கூறுகிறேன்’’ என்றார்கள். அம்ர், இது முடியாது என்று சொன்னான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘‘இதற்குச் சம்மதமில்லை என்றால், பிறகு வா! என்னோடு சண்டையிட ஆயத்தமாகி விடு’’ என்று கூறினார்கள். இதைக் கேட்டு அம்ர் சிரிக்க ஆரம்பித்தான். ‘‘என்னிடம் ஒருவர் இந்தச் சொற்களைக் கூற முடியும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை’’ என்று சொன்னான். பிறகு அவன், ‘‘நீ இப்போது சிறுவன்; நான் உனது இரத்தத்தைச் சிந்த வைக்க விரும்பவில்லை; உன்னுடைய பெரியவர்களில் யாரையாவது அனுப்பு’’ என்றான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், பதிலளித்தவாறு, ‘‘நீ எனது இரத்தத்தைச் சிந்த வைக்க விரும்பவில்லை; ஆனால், எனக்கு உன்னுடைய இரத்தத்தைச் சிந்த வைப்பதில் தயக்கமில்லை’’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட அம்ர் உத்வேகத்தில் குருடனாகி தனது குதிரையிலிருந்து குதித்தான். ஒரு நெருப்புப் பிழம்பைப் போன்று பித்துபிடித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நோக்கிச் சென்றான். மேலும், எவ்வளவு வேகமாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது வாள் வீசினான் என்றால், அது அவர்களின் கேடயத்தைக் குடைந்தவாறு அவர்களின் நெற்றியில் பட்டது. ஓரளவு நெற்றியைக் காயப்படுத்தியும் விட்டது. ஆனால், உடன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டவாறு, எத்தகைய வாள் வீச்சை செய்தார்கள் என்றால், அவனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வாள் அவனது தோளை வெட்டியவாறு கீழே இறங்கி விட்டது. அம்ர் துடிதுடித்து விழுந்து உயிரை விட்டு விட்டான்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சமாதான மடலை எழுத நியமிக்கப்பட்டார்கள். அவர்கள், ‘‘இந்த உடன்படிக்கை ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்களுக்கும் மக்காவாசிகளுக்கும் மத்தியிலாகும்’’ என்று எழுதினார்கள். இதைப் பார்த்து காஃபிர்கள் கொதித்தெழுந்தனர். அவர்கள், ‘‘எங்களால் இந்தச் சொற்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், நாங்கள் முஹம்மதை ரஸூலுல்லாஹ்வாக ஏற்றுக் கொள்வதில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் எதற்காக அவர்களுடன் சண்டையிடப் போகிறோம்’’ என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘இவர்கள் சரியாகச் சொல்கிறார்கள்;

உடன்படிக்கையிலிருந்து ‘ரஸூலுல்லாஹ்’ எனும் சொல்லை அழித்து விட வேண்டும்.’’ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘‘இந்தச் சொல்லை அழித்து விடுங்கள்’’ என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஆனால், கட்டுப்படுதல் மற்றும் கீழ்படிதலின் மிக மேலான முன்மாதிரியாகத் திகழ்ந்த ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உள்ளமும் நடுங்க ஆரம்பித்தது. அவர்களின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அவர்கள், ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னால் இந்தச் சொல்லை அழிக்க முடியாது’’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘‘காட்டுங்கள்! காகிதத்தை என்னிடம் தாருங்கள்’’ என்று கூறினார்கள். காகிதத்தைப் பெற்று ‘ரஸூலுல்லாஹ்’ எனும் சொல்லைத் தமது கரங்களால் அழித்து விட்டார்கள்.

கைபர் போரில், கைபரின் தலைவனான மர்ஹப் தனது வாளைச் சுழற்றியவாறு முன் வந்து, ‘‘நான் ஆயுதமேந்திய வீரன், அனுபவசாலி மர்ஹப் என்பதை கைபர் அறியும்’’ என்று கூறிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கண்கள் தளர்ந்திருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘‘நான் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கக்கூடிய அல்லது அல்லாஹ்வும் அவனது தூதரும் நேசிக்கக்கூடிய நபருக்குக் கொடியைக் கொடுப்பேன்’’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கண்களில் தமது உமிழ் நீரைத் தடவினார்கள்; அவை சரியாகிவிட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்குக் கொடியைக் கொடுத்தார்கள். மர்ஹப் முன் வந்து, ‘‘போர்கள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் போது, நான் ஆயுதமேந்திய வீரன், அனுபவசாலி மர்ஹப் ஆவேன் என்பதை கைபர் அறியும்’’ என்றான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ‘‘எனது தாயார் எனக்கு ‘ஹைதர்’ என்று பெயரிட்டார்கள். நான் காடுகளில் வசிக்கும் அச்சுறுத்தும் தோற்றமுடைய சிங்கதைப் போன்றவன் என்று கூறினார்கள். அவர்கள் மர்ஹபின் தலையில் வாள்வீசி அவனைக் கொன்று விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் அலீயின் கைகளால் கைபர் வெற்றிக் கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்தப் போரில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஓர் உதாரணம் ஈமானுக்கு மிகவும் வலுவூட்டக்கூடியதாகும். அவர்களுக்கு ஒரு யூத தளபதியோடு போர் நடைபெற்றது. இறுதியில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை விழவைத்து விட்டார்கள். அவனது நெஞ்சில் ஏறி அமர்ந்து, அவனைக் கொல்ல முனைந்தார்கள். இதற்குள் அவன் அவர்களின் முகத்தில் துப்பிவிட்டான். அப்பொழுது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை விட்டு விட்டு அகன்று விட்டார்கள். அதைப் பார்த்த அந்த யூதன் மிகவும் வியந்தான். அவன் ஹஸ்ரத் அலீயிடம், ‘‘நீங்கள் ஏன் என்னை விட்டு விட்டு விலகி விட்டீர்கள்?’’ என்று கேட்டான். அவர்கள் கூறினார்கள்:- ‘‘நான் இறைவனின் தன்னிறைவைப் பெறுவதற்காக உன்னோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தேன்; ஆனால், நீ எனது முகத்தில் துப்பிய பிறகு எனக்கு கோபம் வந்து விட்டது. ஆக, இப்பொழுது நான் உன்னைக் கொன்றால், நான் கொல்வது எனக்காக இருக்கும்; அல்லாஹ்வுக்காக இருக்காது என்று நினைத்தேன். எனவே, எனது கோபம் தணிவதற்காகவும் நான் உன்னைக் கொல்வது எனக்காக இல்லாமலிருப்பதற்காகவும் நான் உன்னை விட்டு விட்டேன்.’’ இது எத்தகைய மகத்துவமிக்க மேன்மை!

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு, ஷவ்வால் மாதம் நடைபெற்ற ஹுனைன் போரில், முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இருந்தது. மும்முரமாகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, காஃபிர்களின் கடுமையான தாக்குதல் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி சில சஹாபாவே எஞ்சியிருந்த போது, அந்தச் சில சஹாபாவில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு, ரஜப் மாதம் நடைபெற்ற தபூக் போர் குறித்து அறிவிப்பு வருகிறது:- “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்காகப் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைத் தமது பிரதிநிதியாக மதீனாவில் நிர்ணயித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், “தாங்கள் என்னைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மத்தியில் விட்டுச் செல்கிறீர்களா?” என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “உம்முடைய அந்தஸ்த்து என்னோடு, ஹாரூனுக்கு மூஸாவோடு இருந்த அந்தஸ்த்தைப் போன்றது என்பதில் நீர் மகிழ்ச்சி அடைவதில்லையா? ஆனால், எனக்குப் பிறகு நபி யாருமில்லை.” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு யமன் நாட்டுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதத்தை யமன் வாசிகளுக்கு வாசித்துக் காட்டினார்கள். பிறகு ‘ஹமதான்’ முழுவதும் ஒரே நாளில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. இதற்குப் பிறகு யமன் வாசிகளும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு காஸியாக நியமித்தார்கள். அன்னார், “நிச்சயமாக! அல்லாஹ் உமது உள்ளத்துக்கு நேர்வழி வழங்குவான்; உமது நாவுக்கு உறுதியை வழங்குவான். உமக்கு முன் சண்டையிடக்கூடிய இருவர் அமர்ந்தால், நீர் முதல் நபரிடம் கேட்டதைப் போன்று மற்றவர் கூறுவதையும் கேட்கும் வரை தீர்ப்பளிக்கக் கூடாது. இவ்வாறு செய்வதால் உமக்குத் தீர்ப்பு தெளிவாகிவிடக் கூடும்” என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “ இதற்குப் பிறகு எப்போதும் எனக்குத் தீர்ப்பளிப்பதில் ஐயம் ஏற்படவில்லை.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- “எவர் அலீக்கு வேதனையளித்தாரோ அவர் எனக்கு வேதனையளித்தார்.” ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- “மக்களே! நீங்கள் அலீயைக் குறித்து முறையிடாதீர்கள். இறைவன் மீதாணையாக! அவர் அல்லாஹ்வுக்கு அதிகமாக அஞ்சக் கூடியவர்.”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- “இன்றும் நான் துஆவின் பால் கவனமூட்ட விரும்புகிறேன். கடந்த குத்பாவில் ‘அல் ஜஸாயிர்’ பற்றிக் கூறப்படவில்லை. அங்கும் அஹ்மதிகளுக்கு மோசமான நிலைமைகள் உள்ளன. சிலர் சிறைபிடிக்கவும் பட்டுள்ளனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் நிலைமைகளிலும் எளிமையை ஏற்படுத்துவானாக! சிறையிலிருப்பவர்கள் விரைவில் விடுதலையாக வழி ஏற்படட்டுமாக! அரசுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் நீதியுடன் செயல்பட்டவாறு அஹ்மதிகளின் உரிமைகளைச் செலுத்தக் கூடியவர்களாகத் திகழ்வார்களாக! இவ்வாறே பாகிஸ்தானுக்காகவும் துஆ செய்யுங்கள். அந்த மவ்லவிகளும் அதிகாரிகளும் இவ்வாறே செய்து கொண்டிருப்பதும் அல்லாஹ்வின் பிடியில் வருவதுமே அவர்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தால், பிறகு அல்லாஹ் விரைவில் அவர்களைப் பிடிப்பதற்கு வழி செய்வானாக! அஹ்மதிகளுக்கு எளிமைகளை ஏற்படுத்துவானாக!”

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் ரஷீத் அஹ்மத் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)